DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate

Srivilliputtur.

STC.No.1473/2022

Deposition of witness for PW.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | . | உறரிபாஸ்கரன் | ஜாதி | .. | |
| த/பெ | .. | | சமயம் | .. | |
| ஊர் | .. | | தொழில் | .. | வங்கி மேலாளர் |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 11.07.2023.

எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை -</u>**

1. நான் தற்பொழுது ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கிளையில் வங்கி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ.1 காசோலையானது எங்களது வங்கிக்குரியது என்றால் சரிதான். மேற்படி வங்கிக் கணக்கானது எதிரியால் பராமரிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வங்கிக் காசோலையானது போதிய பணமில்லை என்ற காரணத்தால் திருப்பப்பட்டது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி "சரி" என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

**நீதித்துறை விரைவு நடுவர்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

2. மேற்படி காசோலை வசூலுக்கு தாக்கல் செய்த அன்று எதிரியின் வங்கிக் கணக்கில் பணம் எதுவும் இல்லை. எதிரியின் வரவு செலவுக் கணக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் நீ.ம.சா.1 மற்றும் நீ.ம.சா.2 ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. புகார்தாரரும், எதிரியும் ஒரே வங்கியில் கணக்கு வைத்திருந்தால் இருவருடைய கணக்குகளையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வோம். ஆனால் இவ்வழக்கில் புகார்தாரரின் வங்கிக் கணக்கு விவரங்களை தெரிவிக்கவில்லை என்றால் சம்மனில் குறிப்பிடவில்லை. அதனால் கொண்டு வரவில்லை. எதிரி 2015–ம் ஆண்டு வங்கிக் கணக்கை துவங்கியுள்ளார் என்றால் சரிதான். நீ.ம.சா.1 மற்றும் நீ.ம.சா.2–க்கு முந்தைய தேதிகளில் உள்ள எதிரியின் வங்கிக் கணக்கு விவர அறிக்கையை பார்த்தால் எதிரி அவரது கணக்கினை சரிவர பராமரித்தாரா இல்லையா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். காசோலையை நான் சரிவர பரிசீலனை செய்யாமல் திருப்பியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி "சரி" என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

**நீதித்துறை விரைவு நடுவர்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**